**செய்தி வெளியீடு எண்: 537** **நாள்: 15.08.2017**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (15.8.2017) தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய விழாப் பேருரை

******

ஏழைகளின் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கூடுதல் தலைமைச் செயலாளர் உள்துறை அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய காவல்துறை தலைமை இயக்குநர்

திரு. டி.கே. இராஜேந்திரன் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள

சென்னை பெருநகர காவல் ஆணையர்

திரு.ஏ.கே. விஸ்வநாதன் அவர்களே!

முன்னாள் காவல்துறை தலைமை இயக்குநர் திரு. ஆர்.நடராஜ் அவர்களே!

காவல்துறை அதிகாரிகளே!

சீருடைப் பணியாளர்களே!

அவர்தம் குடும்பத்தினர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதலில்
தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் 71வது சுதந்திர தின விழாவை
இன்று மகிழ்ச்சியோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

பொதுச்சேவையில்
சிறந்த முறையில் கடமையாற்றி,
தனது தனித்திறமையை வெளிப்படுத்திய காவல்துறை, தீயணைப்பு மற்றும்

மீட்புப் பணிகள் துறை,
சிறைத்துறை மற்றும் ஊர்க்காவல் படையைச்
சேர்ந்த அலுவலர்களுக்குப் பதக்கம்
வழங்கும் விழாவில் கலந்து கொண்டு
பதக்கங்கள் வழங்கியதில் பெருமிதம் கொள்கிறேன்.

அறவழியைப் பின்பற்றி
விடுதலை பெற்ற நாடு இந்தியா. விடுதலைக்குப்பிறகும் இந்திய மக்கள்
அறவழியை பின்பற்றி குடியரசுக் கொள்கைக்கு வலிமை சேர்த்து
வருகிறார்கள்.

இருப்பினும் மக்களாட்சியிலும் ‘பாதுகாப்பு’
என்பது அவசியமாகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை
மக்கள் அன்புக்கும், ஆதரவுக்கும், அரவணைப்புக்கும் ஆயுதமாகதான்
பாதுகாப்புப்பணி பயன்படுத்தப்படுகிறது.

பாதுகாப்புப்பணியில் ஈடுபடும் காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை,
ஊர்க்காவல்படை என அனைத்துப் பிரிவுகளும் சேவை மனப்பான்மையோடு,
தியாக உணர்வோடு
தங்கள் பணிகளை மேற்கொள்கிறார்கள்.

‘செயற்கரிய செய்வார் பெரியர்’
என்ற குறளின் வரிகளுக்கு ஏற்ப,
காலம் நேரம் கருதாமல்,
கண்துஞ்சாமல், உடல் வருத்தம் பாராமல்,
தத்தம் பணி ஒன்றை மட்டுமே
கடமையாகக் கொண்டு அர்ப்பணிப்பு
உணர்வுடன் செயலாற்றும் வீரர்களை, வீராங்கனைகளை இனங்கண்டறிந்து,

அவர்களின் தனித்திறமைகளை

பொதுமக்களும் அறியும் வண்ணம்
செய்வதற்காகவும்,
காவல்துறையினரை உற்சாகப்படுத்துவதற்காகவும், தமிழ்நாடு அரசு
அவர்களுக்கு விருதுகள் மற்றும்
பதக்கங்கள் வழங்கி சிறப்பித்து வருகின்றது.

இந்தியாவில் தமிழ்நாடு அமைதிப்பூங்காவாகவும்,
சிறந்த பாதுகாப்பான மாநிலமாகவும் விளங்கி
மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது. தமிழ்நாடு இத்தகைய
உன்னத நிலையை அடைவதற்கு,
அந்நிலையைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்கு, தமிழ்நாடு
காவல்துறையில் பணியாற்றும் அனைவரது உழைப்பும்
காரணமாக இருக்கிறது.
நாட்டில் நிலவும் போராட்டங்கள்,
தீவிரவாத போக்குகள், தீ விபத்துகள்,
இயற்கை சீற்றங்கள் ஆகியவற்றால்,
பொதுமக்களின் உயிர், உடைமைகளுக்கு
சேதம் ஏற்படாதவாறு காப்பது
காவல்துறையினர், தீயணைப்புத்துறையினர்,
சிறைத்துறையினர் என அனைத்து
சீருடைப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின்
தலையாய கடமையாகிறது. அந்தக் கடமையை தமிழ்நாடு
சீருடைப்பணியாளர்கள்
மற்றும் அலுவலர்கள் சிறப்பாக செய்து வருகிறார்கள்.
அதனால் அவர்கள் அனைவரையும்
நான் உளமாற பாராட்டுகிறேன்.

அண்மையில் சென்னை தியாகராயநகரில்

ஒரு தனியார் துணிக்கடையில் ஏற்பட்ட
தீ விபத்தில் கடையில் வேலை பார்த்த
14 பணியாளர்கள் 7வது மாடியில் தத்தளித்தார்கள். தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர்
செயல்திறனால் பணியாளர்கள் அனைவரும்
பத்திரமாக மீட்கப்பட்டனர்.
நெரிசல் மிகுந்த அந்த உஸ்மான் சாலை பகுதியில்
தீ அக்கம் பக்கம் பரவாது தடுத்து நிறுத்தினார்கள்.
தீயணைப்புத்துறையினரின் இந்த மகத்தான களப்பணியை பத்திரிகைகளும்
ஊடகங்களும் பொதுமக்களும் வெகுவாக பாராட்டினார்கள்.

இதே போன்று அண்மையில்
சென்னை கொடுங்கையூரில்
ஏற்பட்ட எரிவாயு சிலிண்டர் வெடித்துச் சிதறிய
கோர விபத்தில் தீயை அணைக்கச் சென்ற
ஒரு ஊர்க்காவல் படைவீரர் உட்பட
54 மீட்புப்பணியாளர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்களில் ஒருவரான தீயணைப்பு வீரர்
திரு.ஏகராஜ் தன் இன்னுயிரை நீத்தார்.
இப்படி சீருடைப் பணியாளர்களின்
வீரதீர செயல்களுக்கும், தியாகங்களுக்கும்
கட்டியம் கூறும் பல சாதனைகளை
வரிசைப்படுத்தலாம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், சவால் நிறைந்த காவல் பணியாளர்களின் வாழ்க்கையில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள்.
காவல்துறையைச் சார்ந்த சகோதர, சகோதரிகள்
தங்கள் கடமைகளை தங்கு தடையின்றி,
ஈடுபாட்டோடு செய்வதற்கு அவர்களுடைய

உள்ளமும், உடலும் ஆரோக்கியமாக
இருக்க வேண்டும் என்று
தாயுள்ளத்தோடு சிந்தித்தவர்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.
அதனால்தான் முன்பு எப்போதும் இல்லாத
அளவிற்கு காவல்துறைக்கு பல்வேறு
நலத்திட்டங்களை செயல்படுத்தினார்கள்.
மாண்புமிகு அம்மா வழியில் வந்த அரசு
கொண்டுவந்த சில முக்கிய திட்டங்களையும்
இங்கே சுருக்கமாக குறிப்பிட விரும்புகிறேன்.

40 வயது நிரம்பிய காவல் பணியாளர்களுக்கு
ஆண்டிற்கு ஒருமுறை அரசு மருத்துவமனைகளில்
கட்டணமில்லா முழு உடல் மருத்துவப் பரிசோதனை
அளிக்கப்பட்டு வருகிறது.

சீருடைப் பணியாளர்களுக்கென
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ‘‘உங்கள் சொந்த இல்லம்’’
என்ற திட்டம்
காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூரில் முதற்கட்டமாக துவக்கி
வைக்கப்பட்டது.
இங்கு 47.6 ஏக்கர் நிலப்பரப்பில்,
அனைத்து வசதிகளுடன்
2,673 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
இதே போன்று, தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளிலும்
இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான
பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஆறு ஆண்டுகளில் 14 ஆயிரத்து
977 காவல் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது

குறிப்பிடத்தக்கது. மேலும், 6 ஆயிரத்து 257 காவல்
குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.
சீருடை பணியாளர்களின் சிரமம் அறிந்து,
அவர்களது நலனுக்கென 2011–ம் வருடம் முதன் முதலாக மூன்று இடங்களில்
''தமிழ்நாடு காவல் அங்காடி'' துவங்கப்பட்டது. தற்போது, 7 கோடி ரூபாய்
செலவில் 47 இடங்களில் இயங்கி வரும் தமிழ்நாடு காவல் அங்காடிகளால்
காவல்துறை, சிறைத்துறை, வனத்துறை,
தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்துறையினர் என
ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 880 பேர்
பயன்பெற்று வருகின்றனர்.
இப்பயனை மேலும் விரிவாக்கும் வண்ணம், மேலும் ஒரு தமிழ்நாடு காவல்
அங்காடியை கொண்டித்தோப்பிலும் நிறுவ அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டு நலனுக்காக பணியாற்றிக் கொண்டிருக்கும் காவல் துறையை
வலுப்படுத்தும் வகையில் நவீன ஆயுதங்கள் மற்றும் வாகனங்களை
வழங்குதல், ரோந்துப் பணியை அதிகப்படுத்துதல்
பொது இடங்களில் கண்காணிப்பு
கேமராக்களை பொருத்துதல்,
சீருடைப் பணியாளர்களின்
நலனை மேம்படுத்தும் வகையில்
இடர்ப் படி மற்றும் உணவுப் படியை
உயர்த்தி வழங்குதல், காவல் உணவகங்கள்,
துயில் கூடங்கள், உடற்பயிற்சி மையங்கள்
ஆகியவற்றை ஏற்படுத்துதல்,
காவல் மருத்துவ மனையை மேம்படுத்துதல்,
காலத்தே பதவி உயர்வு வழங்குதல்,
போன்ற நடவடிக்கைகளையும்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்துள்ளார்கள்.

நீங்கள் கடமையில் கண்ணாக இருந்து
சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பதால்தான்
மக்கள் வீட்டிற்குள்ளேயும், வீட்டிற்கு வெளியேயும்,
நிம்மதியாக வாழ முடிகிறது.
சுதந்திரமாக தங்களுடைய
அன்றாட பணிகளைச் செய்ய முடிகிறது.
“என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற புனிதமொழியையே தாரக
மந்திரமாகக் கொண்டு நீங்கள் மக்கள் பணி ஆற்றுங்கள்.
மக்கள்தான் இந்த நாட்டின் எஜமானர்கள். அவர்களுக்கு 24 மணிநேரமும்
நீங்கள் பாதுகாப்பு அளியுங்கள்.
அந்த பாதுகாப்புதான் தமிழ்நாட்டை இன்று பல துறைகளிலும் முன்னேற்றி
இருக்கிறது.

காவல் துறைப் பணி என்பது ஒரு மகத்தான பணி. சமுதாயத்தில், அநீதி
இழைக்கப்பட்ட மக்கள் நியாயம் கோரி, காவல் நிலையங்களுக்கு வரும் போது
அவர்களை மனித நேயத்தோடு அணுகி
அன்பாகப் பேசி அவர்களது குறைகளைக்
கேட்டறிந்து குற்றவாளிகளை
சட்டத்தின் முன் நிறுத்தி
தண்டனை பெற்றுத் தரும் போது
அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.
அதைப் பார்த்து அதற்கு காரணமான
நீங்களும் மகிழ்ச்சி அடைகிறீர்கள்.
சட்டத்தின் மீதும் இந்த அரசின் மீதும்
மக்களுக்கு அதீத நம்பிக்கை ஏற்படுகிறது.

பல்வேறு சவால்களை எதிர்கொண்டு
அல்லும் பகலும் அயராது மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கும் காவல்
துறையினர் தங்கள் கடமையினை மேலும் சிறப்புற ஆற்றும் வகையில்
அவர்களுக்குத் தேவைப்படும்

ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று பொதுமக்களையும் இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு சீருடை பணியாளர்களின் நலனில், அக்கறை காட்டுவதில் எப்போதும் முன்னோடியாக இருந்து வந்துள்ளது, அது தொடரும் என்பதையும் இந்த இனிய நாளில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசுப் பதக்கங்களான குடியரசுத் தலைவரின் வீரதீரப்பணிக்கான காவல் பதக்கம்,

தகைசால் பணிக்கான காவல் பதக்கம்,

மெச்சத்தகுந்த பணிக்கான காவல் பதக்கம்,

வீரதீர பணிக்கான தீயணைப்பு பணி பதக்கம், மெச்சத்தகுந்த பணிக்கான தீயணைப்பு பணி பதக்கம், ஊர்க்காவல் படை மற்றும் உள்நாட்டு பாதுகாப்பிற்கான பாராட்டத்தக்க பணி விருது

மற்றும் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும்

தமிழக முதல்வரின் வீரதீர பணிக்கான

காவல் பதக்கம்,

சமூக சேவைக்கான காவல் சிறப்புப் பணிப்பதக்கம், காவல் புலன் விசாரணை சிறப்புப் பணிப்பதக்கம், அண்ணா பதக்கம் என

வழங்கப் பெறும் காவல் பதக்கம்,

விரல் ரேகை அறிவியல் சீர்மிகு பணிப்பதக்கம்,

காவல் தொழில்நுட்ப சிறப்புப் பணிப்பதக்கம்,

சிறப்புப் பணிக்கான தீயணைப்பு பணிப்பதக்கம், ஊர்க்காவல் படைச் சிறப்பு பணிக்கான விருது ஆகியவற்றை பெற்ற 854 சீருடைப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதக்கம் பெற்றிருக்கும் ஒவ்வொருவருக்கும்

இந்த பதக்கமானது அவர்களது பணியில்

மைல்கல்லாக இருப்பதோடு; பதக்கம் ஏந்தும், பொன்னான தருணமானது வாழ்நாளில்

நெஞ்சை விட்டு அகலாது

என்பதில் கடுகளவும் ஐயமில்லை.

பணியில் அர்ப்பணிப்பு, தொடர் சேவை, பொதுமக்களின் பாதுகாப்பு என
சீருடைப் பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரிய,
முதுகெலும்பாய் செயல்படும் அவர்களின் குடும்பத்தினர்களும் இங்கு
குழுமியுள்ளனர்.
உங்கள் துணையின்றி, தியாகமின்றி,
அவர்களால் சாதனைகள் நிகழ்த்தியிருக்க இயலாது.
அதனால், குடும்பத்தினர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றேன்.
உங்களது மகிழ்ச்சிகரமான, வாழ்நாளில் மறக்க இயலாத இத்தருணத்தில்,
நானும் பங்கேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

உங்கள் பங்களிப்பு இன்று போல்
என்றும் தொடர கேட்டுக் கொள்கிறேன்.

இன்று இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் எனது
பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்து,
தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக
தொடர்ந்து சிறந்த பங்களிப்பை
அனைவரும் வழங்க வேண்டுகிறேன்.
நன்றி,
வணக்கம்.

******

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**